# சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம்

## பிரமாணக் கோவை

## 2023.05.02


சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம்

சமூக அபிவிருத்திப் பிரிவு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

4ம் மாடி, செத்சிறிபாய

பத்தரமுல்ல.

# நோக்கு

சகல சமுர்த்தி பயனாளிக் குடும்பத்திற்கும் நிலையான ஒரு வீடு

# பணி

சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களுக்கிடையில் வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றினை மாதாந்தம் செயற்படுத்தி பேணிச் சென்று அக்குடும்பங்களின் பொருட்டு நிலையான வீடொன்றிற்கான உரித்தினை வழங்குதல், வீடொன்றினைக் கட்டிக்கொள்வதற்கு காணி ஒன்றினை கொள்வனவு செய்வதும் அவர்களை பொருளாதார, சமூக, கல்வி மற்றும் கலாசார ரீதியாக பலப்படுத்துவதன் ஊடாக ஆத்மீகப் பண்புகளை அபிவிருத்தி செய்வதும்.

# இலக்குகள்

1. ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக் குடும்பத்தினையும் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பு வேலைத்திட்டத்தில் பங்களிப்புச் செய்து கொள்வது.

2. ஒவ்வொருமாதமும் சமுர்த்தி லொத்தர் சீட்டிலுப்பினை நடாத்தி 335 பயனாளிக் குடும்பங்களுக்கு ரூபா.02 இலட்சம் வீதம் 335 வீடுகளுக்கான பரிசுகளை வழங்கி வருடாந்தம் 4020 குடும்பங்களது வீட்டுப்பிரச்சினையினைத் தீர்ப்பதன் ஊடாக பயனாளிக் குடும்பங்களின் நிலையான வீட்டுப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினை வழங்குதல்.

3. முாதாந்தம் வழங்கப்படுகின்ற 335 வெற்றி பெறும் வீடுகளை வழங்கியதன் பின்னர் மீதமாகவுள்ள ஏதேனும் நிலுவைகள் இருப்பின் அவற்றினை இந்த நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேறுகின்ற விதத்தில் ஈடுபடுத்திக் கொள்வதும் உள்நாட்டு நிதிச் சந்தையில் சிறந்த பயனுள்ள விதத்தில் முதலீடு செய்வதனூடாகக் கிடைக்கின்ற வருமானங்களை மீண்டும் இந்த நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேறுகின்ற விதத்தில் ஈடுபடுத்திக்கொள்வதும்.

# நோக்கங்கள்

1. சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் நன்மைகளை அதிகரிக்கும் பொருட்டு அவர்களது வீட்டுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்றினை வழங்குதல்.

2. சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தொகுதியினை முறைப்படுத்தி பராமரித்துச் செல்லல்.

3. சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் நிலையான வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதன் ஊடாக அவர்களை பொருளாதார, சமூக, கல்வி மற்றும் கலாச்சார ரீதியாக பலப்படுத்துவதும் அவர்களது ஆத்மீகப் பண்புகளை மேம்படுத்தல்.

4. வெற்றி பெற்ற பயனாளி நிலையான வீடொன்றிற்கு உரிமை கூறும் சந்தர்ப்பங்களில் பயனாளியின் பொருளாதார நிலைகனை கட்டியெழுப்பும் பொருட்டு பொருத்தமான கருத்திட்டங்களில் ஈடுபடுத்துதல்.

5. சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் வேலைத்திட்டத்தினை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி வாய்ந்த விதத்தில் நிறைவேற்றும் முகமாக நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தும் தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதும்.

# வாழ்வின் எழுச்சி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதிய பிரமாணக் கோவை.

2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வாழ்வின் சட்டத்தின் 45வது பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் மூலம் 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிலுப்பினை நடாத்திச் செல்லல் வேண்டும்.

1. இந்த லொத்தரானது ''சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர்'' என்ற பெயரில் இதன் பின்னர் பயன்படுத்தப்படல் வேண்டும்.

2. சமுர்த்தி லொத்தர் சீட்டிலுப்பின் பொருட்டு இலக்கிடப்பட்ட குழுவானது சகல சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களாகும். தற்போது 3500/=,2500/= மற்றும் 1500/= என்ற வகையில் அமைந்த நிவாரணம் பெறும் குடும்பங்'கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது.

3. 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 45வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பானது தேசிய லொத்தர் சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்பு அபிவிருத்தி நிதியானது உள்ள பிரகாரமே பராமரித்துச் செல்லப்படல் வேண்டும்.

5. வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பச் சபை மற்றும் தேசிய பேரவையின் தீர்மானம் மற்றும் அங்கீகாரத்திற்குற்பட்டதான நிவாரண உதவிகளின் பெறுமதியிலிருந்து மாதத்திற்கு ரூபா 100/= இற்கான தொகையினை 2022 ஜுன் மாதத்திலிருந்து அறவிட தீர்மாணிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் பரிசாக வழங்கிய ரூபா 150,000/= இற்கான தொகையானது 2016ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ரூபா 200,000/= வரை அதிகரிப்பதுடன் மாதாந்தம் வழங்கப்படுகின்ற பரிசுகளின் எண்ணிக்கையானது 335 வரை அதிகரிக்கப்படல் வேண்டும்.

6. ஒவ்வொரு வீடமைப்பு லொத்தர் வெற்றியாளரும் குறித்த காலத்திற்குள் சமுர்த்தி பயனாளி ஒருவராக இருககு வேண்டியதுடன் அந்த நிவாரணத் தொகையிலிருந்து 2022 ஜுன் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் வீடமைப்பு லொத்தர் பங்களிப்புத் தொகையான ரூபா 100/= ஐ செலுத்தியிருத்தல் வேண்டும்.

7. சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு சகல நிவாரண உதவி பெறும் குடும்பங்களிலிருந்து ரூபா 100/= இற்கான தொகையினை ஒவ்வொரு மாதமும் அவர்களின் நிவாரணத் தொகையிலிருந்து கழிப்பனவு செய்து சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் பங்களிப்பு நிதியாக சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைத்துக் கொள்வது தலைமைக் காரியாலயத்தின் கணக்குப் பிரிவின் பிரதம கணக்காளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8. வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு வரவாகின்ற தொகையிலிருந்து மாதாந்தம் சீட்டிழுக்கப்படுகின்ற 355 லொத்தர்களுக்கு மேலதிகமாக சமுர்த்தியின் பொருட்டு தாக்குச் செலுத்தும் பொருளாதார, சமூக, ஆத்மீக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்திற்குட்பட்டதாக சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செலவுகளை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்படுகின்றது.

9. சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்கு வரவிடப்படுகின்ற தொகையானது இந்த நிதியத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி செலவுகளின் பொருட்டும் நிலுவைத் தொகைகள் இருப்பின் அவற்றினை நிதியத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டும் நிதியத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு முதலீடு செய்யவும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

10. இந்த நிதியம் நிர்வகிக்கப்பட வேண்டியது சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.இதன் கட்டமைப்பானது 2002 ஜூன் மாதம் 06ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரித்த அமைச்சரவை நிருபத்தின் ஈ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவராக சமுர்த்தி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரும் ஏனைய அங்கத்தவர்களாக.

- ❖ சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியும்
- ❖ நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவரும்
- ❖ சமுர்த்தி திணைக்களத்தின் சமூக நலன்புரி (நிவாரணம்) பிரிவின் பணிப்பாளர்
- ❖ சமுர்த்தி விடயப்பொறுப்பு அமைச்சினால் பெயரிடப்பட்ட ஒரு பிரதிநிதியும், ஆகும்.

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகரிக்கட்ட அமைச்சரவை நிருபத்திற்கமைய

- ❖ அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரும்.
- ❖ அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்படல் வேண்டும்.

11. சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி நிதிய நம்பிக்கை பொறுப்புச் சபையினால் நிதியத்தின் சகல கிடைப்பனவுகளும் மற்றும் கொடுப்பனவுகளும் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிதியத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டான சகல தீர்மானங்களும் நடவடிக்கைளும் மேற்கொள்ள நம்பிக்கைப் பொறுப்புச் சபையால் காலத்திற்கு காலம் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதுடன் சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்புக்கு மேலதிகமாக அதன் நம்பிக்கை பொறுப்புச் சபை ஊகிக்கின்ற இந்த நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்றதாக கருத்திட்டங்களை அந்த நிதியத்தின் நிதி மற்றும் சட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள முடியும்.

12. சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற கணினி வேலைத்திட்டங்களை வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் தயாரித்துக் கொள்ளப்பட்ட கணனி வேலைத்திட்டம் ஒன்று சார்ந்ததாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. இந்த லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு சகல மாவட்டங்களிலுமுள்ள பயனாளிக் குடும்பங்களின் பிரதான வீட்டுக்குடியிருப்பாளரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடிய முதியோர் அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்கள் உள்ளடங்கிய கணினித் தரவுத் தொகுதி ஒன்றினை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

14. பயனாளிப் பெயர்பட்டியலை கணினி மயப்படுத்தும் பொருட்டு கொடுப்பனவு ஒன்று லொத்தர் நம்பிக்கை நிதியச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் எதிர்காலத்தில் சமுர்த்தி வீடமைப்பு லொத்தரை நடாத்திச் செல்லும் பொருட்டு நேரடியான நிர்வாக செலவினை லொத்தர் நம்பிக்கை நிதியச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அளவு மேற்குறிப்பிட்ட நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அதிகாரமுள்ளது.

15. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நிவாரணம் பெறுவோரின் விபரங்கள் உள்ளடங்கிய கணினித் தரவுத் தொகுதியினூடாக அந்தந்த பயனாளிக் குடும்பங்களின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் இலக்கம் ஒன்றினை திடீரென வழங்கப்படல் வேண்டும்.

16. ஒவ்வொரு மாதத்தின் பொருட்டும் மேற்கொள்ளப்படுகின்ற சீட்டிழுப்புக்களின் மூலம் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் ரூபா 200,000/- வீதம் 335 பரிசுகள் வழங்கப்படல் வேண்டும். இந்த சீட்டிழுப்பு மாதத்திற்கொரு முறை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

17. ஒவ்வொரு சீட்டிழுப்புக்கு முன்னரும் அந்தந்த மாதத்தின் சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டத்திலிருந்து விலகிய மற்றும் புதிதாக நிவாரணம் பெற்ற பயனாளிகளின் தகவல்களை கணினித்தரவுத் தொகுதியில் பதிவேற்றஞ் செய்து முறைமைப்படுத்துதல் வேண்டும்.

18. ஒவ்வொரு சீட்டிழுப்பும் மேற்கொண்டதன் பின்னர் வெற்றி பெற்ற இலக்கங்கள் உள்ளடங்கிய பயனாளிப் பெயர்ப்பட்டியலை பிரதான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றின் மூலம் ஒளிபரப்பி ஒவ்வொரு வெற்றி பெற்ற இலக்கத்தினையுடைய பயனாளிகளுக்கும் அறிவிக்கும் பொருட்டு உத்தியோகபூர்வ பெறுபேறுகள் அறிவிக்கப்படல் வேண்டும். இந்த உத்தியோகபூர்வ பெறுபேறுகள் அறிவிக்கப்படல் வேண்டும். இந்த உத்தியோகபூர்வ பெறுபேறுகள் செய்திப் பத்திரிகைகள் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரச்சாரப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு தகவல்களை முறைமைப்படுத்தும் போது ஏற்படுகின்ற தவறுகளின் பிரகாரம் குறித்த சீட்டிழுப்புக் காலத்திற்குற்பட்ட நிவாரணம் கிடைக்காத ஒருவருக்கு வெற்றி கிடைக்கப் பெற்றால் அதன் பொருட்டு அவருக்கு அல்லது அவரது வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கி வாழ்வோருக்கு எந்த விதத்திலும் உரித்துக் கோர முடியாது.

19. வெற்றி பெற்ற பயனாளிகளின் பொருட்டு பரிசுகளை வழங்கும் போது பிரதேச செயலாளர்கள் ஊடாக அவர்களது அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் பரிசுத் தொகையினை விடுவித்தல் வேண்டும்.

20. சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் அல்லது பிரிவெனாக்களில் கல்வி பயிலும் பிக்குமார்களாக உள்ள சந்தர்ப்பங்களில் அந்தப் பரிசுத் தொகையினை வெற்றி பெற்ற பயனாளிக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பரிசுத் தொகை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வெற்றி பெற்ற பயனாளி இறந்திருந்தால் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணையின் பின்னர் இந்த பயனாளியின் சட்டபூர்வமான வாழ்க்கைத் துணைக்கு அல்லது அந்த பயனாளிக் குடும்பத்தில் மிகப் பொருத்தமான தங்கிவாழ்பவர்களுக்கோ (திருமணமாகாத அல்லது இளவயதுப் பிள்ளைகள்) பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

22. தனிநபர் நிவாரணம் பெறும் ஒருவராயின் அச்சந்தர்ப்பத்தில் அவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் அதன் பொருட்டு எவருக்கும் உரிமை கோர முடியாது.

23. வழங்கப்படுகின்ற பரிசுத் தொகையானது பயனாளி வதியும் வீட்டினைத் திருத்துதல், புதிய வீடொன்றினை நிர்மாணித்தல், காணி ஒன்றினைக் கொள்வனவு செய்தல், நிலையான வீடொன்றிற்கான உரித்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அப்பரிசுத் தொகையினை வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபடுத்தும் பொருட்டு என்ற ஒரு பணியின் மாத்திரம் ஈடுபடுத்த முடியும் என்பதுடன் இப்பரிசுத் தொகையினை பிறிதொரு பணியின் பொருட்டு ஈடுபடுத்துவதாயின் அது தொடர்பில் பரிசு பெற்றவரின் கோரிக்கைக் கேற்ப சமுர்த்தி பிரதேச உத்தியோகத்தர்களின் சிபார்சுகளின் கீழ் பிரதேச செயலாளர்களுக்கு தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

அத்துடன்

I. எவரேனும் வெற்றி பெற்ற நபர் ஒருவர் 60 வருடங்களைத் தாண்டியுள்ள சந்தர்ப்பத்தில் அவரால் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் தொடர்பில் பரீட்சித்துப் பார்த்து பொருத்தமான பிரகாரம் பரிசுத் தொகையினை விடுவித்தல்.

II. வெற்றி பெற்ற பயனாளி அல்லது தங்கி வாழ்பவர் ஒருவர் குணப்படுத்த முடியாத விசேடமான நோய்களுக்குள்ளாகியுள்ள சந்தரப்பத்தில் அல்லது விசேட சத்திர சிகிச்சை ஒன்றினை மேற்கொற்வதற்காக வைத்தியர்கள் சிபாரிசு

செய்துள்ள சந்தர்ப்பத்தில் தேயைான வைத்திய சிகிச்சையின் பொருட்டு நிதியை விடுவிக்க முடியும்.

24. வெளிநாடு செல்லல் ஒன்றின்போது பயனாளி வெளிநாடு சென்றுள்ள 03 வருடங்களின் பொருட்டு மாத்திரம் பரிசுத் தொகையினை வழங்க முடியும்.அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் பரிசுத்தொகை கணக்கில் வரவு வைக்கப்படும்.

25. பிரதேச செயலாளர்களால் லொத்தரில் வெற்றி பெற்றோரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தியதன் பின்னர் குறித்த மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களின் முழுமையான கண்காணிப்புக்குட்பட்டதாக பரிசுகளை விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

26. இதுவரையில் வெற்றிபெற்றோர்களின் பரிசில்களை வழங்கும் அதிகாரம் தலைமைக் காரியாலயத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2014/2015 ஆம் ஆண்டின் சீட்டிழுப்புத் தவணையிலிருந்து மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கு பரிசில்களை வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றது.

27. ஒவ்வொரு சீட்டிலுப்பின் இறுதிலும் அந்த சீட்டிழுப்பினை மேற்கொண்ட தினத்திலிருந்து 03 மாதங்கள் கழியும் வரை மாத்திரம் பரிசுப் பொருட்களை வழங்குதல் வேண்டும். வழங்கத் தவறுகின்ற பரிசில்களுக்கு நிலுவையாகின்ற தொகை அக்கால வரையின் இறுதியில் தலைமைக் காரியாலயத்தின் வீடமைப்பு லொத்தர் நிதியக் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

28. ஒவ்வொரு சீட்டிழுப்பின் போது தேசிய லொத்தர் சபை, கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம், நிதி அமைச்சு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய உத்தியோகத்தர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றின் முன்னால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

29. ஒவ்வொரு சீட்டிழுப்பின் போதும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம், மற்றும் தேசிய லொத்தர் சபை, மற்றும் சமுர்த்தி திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

30. ஒவ்வொரு சீட்டிலுப்புச் சந்தர்ப்பத்திலும் கண்காணிப்பு குழுவின் அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு சீட்டிழுப்புத் தவணைக்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தொகை ஒன்று கண்காணிப்புக் குழுக் கொடுப்பனவாக செலுத்த வேண்டும். அக்கொடுப்பனவுகள் காலத்திற்கு காலம் பொருத்தமான பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு அதிகாரமுள்ளது.

31. நம்பிக்கை பொறுப்புச் சபைக்குத் தேவையான பிரகாரம் காலத்திற்கு காலம் மேற்குறிப்பிட்ட பிரமாணங்களை திருத்தஞ் செய்வதற்கு அல்லது புதிய பிரமாணங்களை மேற்கொள்வதற்கு அந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு அதிகாரமுள்ளது.

## கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

1. வீடொன்றினை நிர்மாணிப்பதாயின் அல்லது திருத்தஞ் செய்தலின் பொருட்டு ஒரு இலட்சம் ரூபா வீதம் இரு தடவையில் பணத்தினை விடுவித்தல்.

2. காணியொன்றினை கொள்வனவு செய்தல், அல்லது சுயதொழில் ஒன்றின் பொருட்டு வாகனம் ஒன்றினைக் கொள்வனவு செய்ய குறித்த தொகையினை பயன்படுத்துவதாயின் ரூபா 02 இலட்சத்தினை ஒரே தடவையில் வழங்குதல்.

3. 60 வயதிற்கு மேற்பட்ட பயனாளிகளின் பொருட்டு வீடொன்று நிர்மாணிக்கப்படாவிடின் தேவைக்கேற்ப பணத்திணை விடுவித்தல்.

4. பிரிவெனாக்களில் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் பிக்குகளின் கோரிக்கைக்கு ஏற்ப நான்கு தவணைகளில் பணத்தினை விடுவித்தல்.(விசேடமாக கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு)

Translated by:-M.M.M.Jawhar(Translator)